International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 04 October to December 2023 www.irjtsjournal.org

# கொரொனாத் தொற்றுக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டு முன்றில் அரங்கு - ஓர் ஆய்வு

# Front-of-Home Theater during the Corona Pandemic – A Study

பேராசிரியர் சி.ஜெயசங்கர்,

*நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.*

*Prof. S.Jeyasankar,*

*Department of Fine Arts, Eastern University, Sri Lanka*

து.கௌரீஸ்வரன்,

*நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.*

*Mr.T.Gowrieeswaran,*

*Lecturer, Department of Fine Arts, Eastern University, Sri Lanka*

*Generally theatre is the medium of the people. Theatre becomes the medium of expression whenever and where ever in history human being encountering challenges. In times of Covid-19 human beings were forced to isolate within their homes. The existing electronic hegemony engulf the people particularly the younger generations within their isolated spaces Vis-a vie homes.*

*In times of Covid-19 theatre becomes Zoom Theatre. It has the power to integrate people from beyond the borders. But the fundamental nature of theatre is connecting the people in their own environment. The face to face interactive nature of theatre is its power and because of this nature theatre is always an art of the people.*

*Home Front Theatre integrate family members in their home space and induce them to be active in actions in an around their home. This connects the experienced elders and energetic youngsters and children in action related to their house hold activities such as games, storytelling, gardening particularly for girls, home management particularly for boys, making scarecrows and perform etc.*

*This paper deals with the Home Front Theatre with the background of conceptual and experiential nature.*

**Key words:** *Environment, empowerment, equity, collective, interaction.*

**ஆய்வுச்சுருக்கம்:** *உலகின் வரலாற்றில் மனிதகுலம் சவால்களை எதிர்கொண்ட போதெல்லாம் நாடகமும் அரங்கக் கலையாக்கங்களும் அச்சவால்களை எதிர்கொள்வதற்கான சிறந்த சாதனமாகக் கையாளப்பட்டு வந்துள்ளதை அனைத்துலக நாடக அரங்க வரலாற்றினூடாக ஆய்ந்தறிய முடிகின்றது.இந்தவகையில் கடந்த 2020 - 2021 ஆம் ஆண்டுகளில் உலகை நிலைகுலையச் செய்த கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் மனிதர்கள் வீடுகளுக்குள் முடங்கி வாழ நேர்ந்த சூழலில் அரங்கியலாளர்கள் புதிய அசாதாரண நிலைமைகளுக்கேற்ப நாடக அரங்க நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கினார்கள். இவற்றுள் ஒரு முன்னெடுப்பாகவே இலங்கையின் மட்டக்களப்பில் வீட்டு முன்றில் அரங்கு என்ற எண்ணக்கருவாக்கமும் அதன் பிரயோகமும் அமைந்திருந்தது. இவ்விதம் கொரொனாத்*

*தொற்றுக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டு முன்றில் அரங்கு பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் உரையாடப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்** : *சுற்றுச்சூழல்,சமத்துவம், ஆளுமையுருவாக்கம், தொடர்புகொள்ளல், வலுப்படுத்துதல்*

**அறிமுகம் :**

நாடகமும் அரங்கும் மனித வாழ்வியலுடன் இரண்டறக் கலந்ததாக இருந்து வருகின்றது. உலகில் மனித குலம் பரிணமித்த காலத்திலிருந்தே மனிதரின் இயல்புகளுள் ஒன்றாகப் போலச் செய்தல் தோன்றிவிட்டமை பற்றி ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள். வர்க்க பேதங்களற்ற ஆதிகாலப் பொதுவுடமைச் சமூக அமைப்பிலிருந்து வர்க்கங்கள் உருவாகி அது விருத்தியடைந்த நவீன சமூகங்கள் வரை அதனதன் விருப்புக்களுக்குந் தன்மைகளுக்கும் ஏற்ற விதத்தில் மனித வாழ்வியலின் பல்வேறு தேவைகளையும்ஈட்டிக்கொள்வதற்கான சாதனமாக அரங்காற்றுகைகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இதனால் நாடகமும் அரங்கியலும் இயங்குநிலை கொண்ட கலை வடிவமாக சிறப்புத் தன்மையினைப் பெற்றுக் கொண்டது. இதனையே“நாடகம் என்பது எப்போதும் நிகழ்காலத் தன்மை கொண்டதாக, நிகழ்காலத்தவர்களுக்காகவே இயங்குவது, இயக்கப்படுவது”(அஸ்வகோஸ்,1998:24) எனும் மேற்கோள் சுட்டிக்காட்டுகின்றது.

உலகில் அரங்காற்றுகைகள் பல்வேறு பரிமாணங்களை உடையனவாகக் காணப்படுகின்றன. சடங்கரங்கு,உள்ளூர் அரங்கு, நவீன அரங்கு, பின்காலனிய அரங்கு, பின்நவீன அரங்கு, காலனீயநீக்க அரங்கு என்று பல்வேறு அரங்க வகைகள் பற்றி ஆய்ந்தறியப்பட்டு வருகின்றன.

பொதுவாக உலகின் வரலாற்றில் மனித உயிரிகளை சமூகப் பிராணிகளாகத் தகவமைப்பதற்கு அரங்கு காத்திரமாகப் பணியாற்றி வந்துள்ளமை பற்றி விளங்கிக்கொள்ள முடிகின்றது. இந்த உலகத்தில் தாம் வாழும் பிரதேசத்தின் நிலைமைகளை விளங்கிக்கொள்ளவும் சகமனிதர்களுடன் இசைந்து வாழும் வாழ்வியலைக் கற்றுக்கொள்வதற்கும் மனிதர்களுக்கு உதவிவரும் பொருத்தமான ஊடகமாக அரங்கு தொழிற்பட்டு வருகின்றது. கட்டமைக்கப்பட்ட கல்வி முறைமைகள் உருவாகுவதற்கு முன்பிருந்தே ஊர்களில் திறந்த வெளிகளில் நடைபெறக்கூடிய அரங்க நடவடிக்கைகளில் மனிதர்கள் பங்குகொள்வதனூடாகஅவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவை விருத்தி செய்யப்பட்டு வந்துள்ளன. உலகின் உள்ளூர் அரங்குகள் பற்றிய ஆய்வாளர்தம் கருத்துக்கள் இதனை மெய்ப்பித்து வருகின்றன.

மனித வாழ்வில் சவால்கள் உருவான போது அச்சவால்களை எதிர்கொண்டு மனிதர்கள் வாழ்வதற்குத் தைரியமூட்டிய சாதனங்களுள் அரங்கு முந்நிலை வகித்து வந்துள்ளது. இந்தியாவில் ஆங்கிலேயக் காலனித்துவத்திற்கு எதிராக இந்தியத் தேசியச் சிந்தனையினை மக்கள் மனங்களில் பதியச் செய்வதில் அரங்கின் பங்கு அளப்பரியதாக இருந்துள்ளது. அதேபோல் பகுத்தறிவுச் சிந்தனைகளை மக்கள் மயப்படுத்துவதிலும் அரங்கு முக்கிய பங்களிப்பு வழங்கியுள்ளது.இதனை ஆய்வாளர் கோ.பழனி அவர்கள் “திராவிட இயக்கக் கருத்துக்கள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டு, திராவிட இயக்கம் அடுத்த கட்ட நிலைக்கு - அரசாளும் நிலைக்கு உயர்த்தப்பட்டதற்குக் காரணம் தமிழ் நாடக உலகம்”(பழனி,கோ,2019:55) எனக்கூறியுள்ளமை கவனத்திற்குரியது.

இலங்கையில் கொடூர போர்க்காலத்தில் வெளியுலகத்துடன் தொடர்புகளற்று மூடுண்ட வாழ்வியலுக்குள் உயிர் அச்சுறுத்தலுடன் வாழ்ந்த வடமாகாணத் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் வாழ்வு மீதான பற்றினை உண்டாக்கி

அவர்களை வாழ வழிப்படுத்துவதில் அரங்கின் வகிபாகம் காத்திரமானதாக இருந்துள்ளது. 1980 - 1990 களில் இலங்கையின் யாழ் குடா நாட்டில் உருவான நாடக அரங்க நடவடிக்கைகள் இதற்கான சான்றுகளாக உள்ளன.

இவ்விதமாக எண்ணற்ற உதாரணங்களையும் எடுத்துக்காட்டுக்களையும் உலக நாடக அரங்க வரலாற்றிலிருந்து நாம் காண முடிகின்றது. இப்பின்புலத்தில் கொரொனாத் தொற்றின் காரணமாக 2020 - 2021 வரை ஏறத்தாழ இரண்டு வருடங்கள் இந்த உலகத்தின் வழமையான நடவடிக்கைகள் முடங்கிய பெருஞ் சவாலான காலத்தில் இச்சவால்களிலிருந்து மீண்டெழுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதில் அரங்க நடவடிக்கைகள் பலவும் நடைபெற்றுள்ளமை பற்றி அறிய முடிகின்றது.

**கொவிட் அச்சுறுத்தலும் அதன் தாக்கங்களும் :**

கொரொனாத் தொற்றின் அச்சுறுத்தல் என்பது மனிதர்களைத் துாரப்படுத்தும் தன்மை கொண்டதாக இருந்தது. சக மனிதருடன் நெருக்கமாகத் தொடர்புகொள்வதை முற்றாகத் தவிர்க்குமாறு இக்காலத்தில் வலியுறுத்தப்பட்டது. இதற்காக ஊரடங்கு விதி முறைமைகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. நோய்த் தொற்று அற்றவர்கள் மாத்திரம் தத்தம் வீடுகளுக்குள் முடங்கி வாழுமாறும் ஏனையோருடனான தொடர்பாடல்களை இணைய வழியில் மாத்திரம் மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டது. இதனால் மனிதர்களுக்கிடையிலான நேரடித் தொடர்பாடலும் அதன்போது நடைபெறும் ஊடாட்டமும் வலுவிழந்து போனது. இதற்கு எதிர்மாறாக மனிதர்கள் தொடர்பாடல் வசதிகள் பலவற்றையும் உட்கொண்ட கணினி மற்றும் கைப்பேசிகளுடன் தங்களைச் சங்கமமாக்கிக் கொள்ளும் நிலைமை மிகவும் வலுப்பெற்றது.ஒரு குடும்பத்திலேயே ஒவ்வொருவருக்கும் ஒரு கைப்பேசி வாங்கி அதனுடன் தமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைமைகள் தீவிரமடைந்தன.

கொரொனாக் காலத்தில் உலகை ஆளும் பல்தேசியக் கம்பனிகள் தமது வணிகத்தை மென்மேலும் பெருக்கிக் கொள்வதில் நாட்டங்காட்டின இதனால் மனிதர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. அதாவது நுகர்வுக் கலாசாரத்தைப் புதிய நிலைமைகளுக்கேற்ப தீவிரமாக வளர்த்தெடுப்பதற்கு பல்தேசிய வணிக ஆதிக்கம் முயற்சித்தது. இதில் தகவல் தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டு இணைய வழியில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைமையினை உலகமயப்படுத்தும் காரியங்கள் நடந்தேறின ஒரு நாட்டின் மிகவும் பின்தங்கிய கிராமங்கள் என அழைக்கப்படும் ஊர்களில் வாழும் மனிதர்கள் இணைய வழியில் பல்தேசிய நிறுவனங்களின் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வசதிகளையும், பயிற்சிகளையும், பழக்கத்தையும் பெற்றுக்கொள்ளும் ஏதுநிலைகள் ஊக்குவிக்கப்பட்டன.

மனிதர்கள் வீடுகளுக்குள் முடங்கியதால் வீடுகளிலே பெண்களின் வேலைப்பளு மேலும் அதிகரிக்கும் நிலைமகள் உருவாகின. வழமைக்கு மாறாகப் பெண்கள் அதிக வேலைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. மரபு ரீதியான ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பிற்குள் இயங்கும் குடும்பங்களில் பெண்களின் நிலைமை பெரிதும் பாதிப்பிற்குள்ளானது. இணையத் தொடர்பாடலுக்குள் மூழ்கிக் கிடக்கும் கணவருக்கும் ஏனைய உறவுகளுக்கும் உணவு சமைத்தல், இதர வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் எனப் பெண்கள் ஓய்வின்றி இயங்க வேண்டிய நிலைமைகள் அதிகரித்தன. இத்தகைய நிலைமைகளையிட்டு பெண்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பிய போது குடும்பங்களுக்குள் வன்முறைகள் உருவாகும் நிலைமைகள் அதிகரித்தன. இதனைப்பின்வரும் மேற்கோள் உறுதிப்படுத்துகின்றது.“கொரோனா முடக்கல்நிலை காலத்தில் இலங்கையில் நாளாந்தம் சராசரியாக 10 முதல் 15 வரையான வீட்டு வன்முறை குறித்த முறைப்பாடுகள் பதிவாகின என்பது உங்களுக்குத் தெரியுமா? இப்போது

தினமும் பதிவாகும் முறைப்பாடுகளின் சராசரியானது, முன்னர் மாதாந்தம் பதிவாகும் முறைப்பாடுகளின் சராசரிக்கு சமமானதென, பொலிஸ் துறையின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் குறிப்பிடுகின்றது."(ஹேசானி கருணாரத்ன,2021)

சிறுவர்களுக்கானவை என்ற பெயரில் இணையத்தளங்களில் வரும் வன்முறை, போட்டித்தன்மை, அடிப்படைவாத எண்ணங்கள், பால்நிலைப் பாராபட்சம் முதலான சிந்தனைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை ஆவலுடன் பார்ப்பவர்களாகச்சிறுவர்கள் இசைவாக்கம் பெறும் நிலைமைகள் இக்காலத்தில் அதிகரித்தன.அதாவது சாதாரண காலத்தில் காலை தொடக்கம் மாலை வரைக்கும் பாடவிதானங்களைக் கற்பதிலேயே தமது முழு நேரத்தையும் கழித்து வந்த சிறுவர்கள் கொரோனாத் தொற்று ஆதிக்கஞ் செலுத்திய அசாதாரண காலத்தில் வீடுகளில் முடங்கிய போது மேற்படி இணையத் தளங்களுள் பிரவேசிப்பதற்கான ஏது நிலைகள் அதிகரித்திருந்தன.இவை சிறுவர்களின் ஆக்கபூர்வமான உருவாக்கத்திற்குச் சவாலானவையாக அமைந்துள்ளன.

**வீட்டு முன்றில் அரங்கின் உருவாக்கம் :**

இவ்வாறு கொவிட் தொற்றுக் காலத்தில் மனிதர்கள் வீடுகளுக்குள் முடங்கிய அசாதாரண நிலைமைகளின் போது பல பாரதுாரமான பாதகமான விளைவுகள் மேலும் அதிகரிக்கத் தொடங்கிய பின்புலத்தில் வீட்டு முன்றில் அரங்கு எனும் எண்ணக்கருவாக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான எத்தனங்கள் இடப்பட்டன. இலங்கையில் மட்டக்களப்பைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவினால் இந்த அனர்த்தகால அரங்கச் செயற்பாட்டின் முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனை வீட்டு முன்றில் அரங்கு பற்றி கட்டுரை எழுதியுள்ள இரா.சுலக்சனா அவர்கள் "அரங்கில் பல்வேறு பரிசோதனை முயற்சிகள் நடந்துகொண்டிருந்த காலத்தில், அவரவர் சூழலோடும் குடும்பங்களோடும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பினை வீட்டு முன்றில் அரங்கு முன்னெடுத்திருந்தது" (சுலக்சனா,இரா,2022) எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவின் இணைப்பாளராகிய சி.ஜெயசங்கர் அவர்களால் நாடகமும் அரங்கியலும் எனுந்துறையினைச் சார்ந்துஅக்கறையுடனும், ஆர்வத்துடனும் ஈடுபடும் இளந்தலைமுறையினரைத் தொடர்பு கொண்டு நெருக்கடியான கால கட்டத்தில் அரங்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியதன் தேவை குறித்து உரையாடப்பட்டது.வீட்டு முன்றில் அரங்கு என்பது நமது மரபில் இருந்து வரும் ஆற்றுகைப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என்பதும் இந்த ஆற்றுகைகள் புலன்களுக்குப் புலப்படுவதாகவும், புலப்படாதவைகளாகவும் இருந்து வரும் தன்மைகள் குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டது. இந்த ஆற்றுகைப் பண்பாட்டை கருத்திற் கொண்டு அனர்த்த காலத்தின் தேவைகளுக்கேற்றவாறு வீட்டு முன்றில் அரங்கினை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதாவது ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில் தம்முடன் வாழ்கின்ற குடும்ப அங்கத்தவர்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரம் வசதி வாய்ப்புக்களுக்கேற்ற விதத்தில் வீட்டு முன்றில் அரங்கு எனும் எண்ணக்கருவாக்கத்தை நடைமுறைப்படுத்தும் வேலைகளில் ஈடுபடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப பல்வேறு வகைகளில் இந்த அரங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் முடிவாயிற்று. இதனை சுலக்சனா அவர்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்."கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களால் சூழலோடு இணைந்து வாழுதலின் அவசியத்தை சூழலை வாசித்தலின் அவசியத்தை, எங்களது சூழல்களை விளங்கிக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தும் அரங்க முன்னெடுப்பாக வீட்டு முன்றில் அரங்கு மாணவர் மத்தியில் அறிமுகஞ் செய்யப்படுகின்றது" (சுலக்சனா,இரா,2022)

**வீட்டு முன்றில் அரங்கின் பிரயோகங்கள் :**

இந்த வகையில் வீட்டுத் தோட்டம் செய்வது பற்றிக் கலந்துரையாடி அதனைக் கலாபூர்வமாக மேற்கொள்வதற்கான காரியங்களில் ஈடுபடுவது குறித்து உரையாடப்பட்டது. வீட்டிலே வாழும் மூத்த தலைமுறையினரிடம் மரபணுமாற்றஞ் செய்யப்படாத உள்ளூர்ப் பயிரினங்கள், கீரைகள், காய் கறிகள் பற்றிக் கேட்டறிதல் அவர்கள் கூறும் கதைகளை வீட்டிலுள்ள சிறுவர்களைச் செவிமடுக்கச் செய்தல், அவற்றினைப் பெற்றுக்கொண்டு நடும் பணியில் ஈடுபடுதல், இவை தொடர்பாக ஓவியம், பாடல் ஆக்கங்களை உருவாக்க வழிப்படுத்தல் என்ற அடிப்படையில் இவை முன்னெடுக்கப்பட்டன, உதாரணமாக ஒரு விதையை நடுதல் அது முளை விடும் நிலைமைகளை அவதானித்தல், அது வளர்வதனைப் பார்த்தல் வளரும்போது அதற்கு ஏற்படும் சவால்களை அவதானித்தல் அதனைத் தீர்க்க வழி தேடுதல் அதனைப் பிரயோகித்தல் அதன் முழு வளர்ச்சியைப் பார்த்தல் அதன் பயன்களைப் பெறுதல் எனும் படிமுறையான செயற்பாட்டில் சிறுவர்களை ஈடுபடுத்தி அவ்வனுபவங்களைப் படமாகவோ பாடலாகவோ கதையாகவோ ஆக்கும் காரியத்திற்கு வழிப்படுத்தல் என்று இவ்வாற்றுகைச் செயற்பாடு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது.

இதன் ஒவ்வொரு கட்டங்களிலுமான ஒளிப்படங்களை நண்பர்களிடையே பகிர்தலும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் கொவிட் காலத்தில் வீடுகளுக்குள் முடங்கிய சிறுவர்கள் ஆக்கபூர்வமாக வளர்வதற்கான நிலைமைகள் செயல்வடிவம் பெற்றதை உணர முடிந்தது.அத்தோடு எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு உருவாகாமல் ஒவ்வொரு குடும்பத்தினரும் தத்தமக்குத் தேவையான உணவில் ஒரு சிறு பகுதியையேனும் தமது வசிப்பிடங்களில் உற்பத்தி செய்து வாழும் வாழ்வியலுக்கான பயிற்சியாக இவ்வாற்றுகைச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது."வீட்டு முன்றில் அரங்கு எங்களது சூழல்களில் கிடைக்கின்றவற்றைக் கொண்டு வாழுதலுக்கான அறிவுருவாக்க முன்னெடுப்புக்களை மீள நினைவுக்குக் கொண்டு வருவதனூடாக சமுதாயப்படுத்தலை ஊக்குவிக்கின்றது" (சுலக்சனா,இரா,2022)

அடுத்து வீட்டு முற்றத்தில் உள்ளூர் விளையாட்டுக்களை விளையாடும் ஆற்றுகையினை ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்த்துதல் எனும் செயற்பாட்டினூடாக வீட்டு முன்றில் அரங்கை முன்னெடுப்பது என்று திட்டமிடப்பட்டு அது மேற்கொள்ளப்பட்டது. சிறு பராயத்தில் பெற வேண்டிய அறிவு திறன் மனப்பாங்கு விருத்திகளை வழங்கவல்ல உள்ளூர்ச் சிறுவர் விளையாட்டுக்களை மூத்த தலைமுறையினரிடமிருந்து கேட்டறிந்து அவற்றினை வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தி அதனை குறிப்பிட்ட நேரம் விளையாட ஊக்குவித்தல் இதனூடாக மேற்கொள்ளப்பட்டது. இதில் சிறுவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார்கள்.

மேலும் வீட்டிலுள்ள மூத்த தலைமுறையினரிடமிருந்து கதைகளைக் கேட்டல்,சிறிய கதைகள், தொடர் கதைகள் எனக் கதைகளைக் கேட்கும் நிலைமைகளை வலுப்படுத்தி ஒரு குறிப்பிட்ட நேரம் அக்கதைகளைக் கேட்கும் அரங்கு இதனை முன்னெடுத்த வீடுகளில் இடம்பெற்றிருந்தது.

ஆக்கபூர்வமான கைவினையாக்கங்களில் ஈடுபடுவதனை மேற்கொள்வதும் இவ்வீட்டு முன்றில் அரங்க நடவடிக்கைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதாவது ஓட்டுச் சித்திரங்கள் செய்தல், களிமண் உருவங்கள் செய்தல், பெட்டி பாய் இழைத்தல் முதலான பல்வேறு கைவினையாக்கங்களுள் ஏதாவது ஒன்றினைப் பயிலுதல் இதன்போது ஊக்குவிக்கப்பட்டது.

மேலும் உள்ளூர்ப் பாடல்களைப் பாடுதல் செயற்பாட்டினூடாக இந்த வீட்டு முன்றில் அரங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதாவது கூத்துப் பாடல்கள், சடங்குப் பாடல்கள், தொழிற் பாடல்கள் என்பவற்றினைப் பாடும் திறனுள்ள மூத்த தலைமுறையினர் அத்தகைய பாடல்களை ஒரு குறிப்பிட்ட நேரம் பாடுவதற்கு

ஊக்குவிக்கப்பட்டார்கள். இப்பாடல்களை ஏனைய குடும்ப அங்கத்தவர் ஆர்வமாகச் செவிமடுக்கும் நிலைமைகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் இலகுபடுத்துனரால் மேற்கொள்ளப்பட்டது.

அடுத்து கொரோனாத் தொற்றுக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டு முன்றில் அரங்கின் முக்கியமான நடவடிக்கை வீட்டிலுள்ள இளையோர் தாய்மார்களின் நாளாந்த வீட்டு வேலைகளுக்கு உதவுனர்களாக வகிபாகமேற்பதற்கு வழிப்படுத்துவதாகும் பல்வேறு பணிகளில் ஈடுபடும் தாய்மார்களுக்கு அவர்களுக்கான உதவிகளைச் செய்து தாய்மாரின் வேலைப்பளுவைக் குறைக்கச் செய்யும் நடவடிக்கையாகவும் குடும்ப அலகிலிருந்தே பால்நிலைச் சமத்துவத்தை பயில்வுக்குக் கொண்டு வரும் பயிற்சியாகவும் இது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆற்றுகைகளை நிகழ்த்தும் நிலைமை மெல்ல மெல்ல ஊக்குவிக்கப்பட்டது. இதில் இந்தச் செயற்பாட்டை மேற்கொள்பவர் அவ்வீட்டின் ஓர் அங்கத்தவராக இருப்பதுடன் அவர் இச்செயற்பாடுகளை முன்னகர்த்தும் ஓர் இலகுபடுத்துனராகவும் வகிபாகமேற்கும் நிலைமை காணப்பட்டது.

இவ்வாறு தாம் மேற்கொள்ளும் காரியங்களை அதன் குறித்த சில பதிவுகளை இணைய வழியில் தத்தமது நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டு மென்மேலும் இவ்வீட்டு முன்றில் அரங்கை வலுப்படுத்தும் உரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை:**

இவ்விதமாக கொரோனாத் தொற்றுக் காலத்தில் மனிதர்கள் வீடுகளுக்குள் முடங்கி வாழ வேண்டியிருந்த காலத்தில் மனிதர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் நாடகமும் முடங்கியிருக்க வேண்டியிருந்த சூழலில் அவ்வாறில்லாமல் நாடகமும் அரங்க ஆற்றுகைகளும் காலத்தேவைகளுக்கும் சூழ்நிலைமைகளுக்கேற்பவும் தன்னைத் தகவமைத்து இயங்கவல்ல கலை வடிவம் என்ற வரலாற்று நியதிக்கேற்ப வீட்டுச் சூழலில் அனர்த்த காலத்தில் அவசியமாக மேற்கொள்ள வேண்டிய கருமங்களை முன்னெடுப்பதற்கான பொருத்தமான கலை வடிவமாக வீட்டு முன்றில் அரங்கு முகிழ்த்து அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையினை வெளிக்காட்ட முடிகின்றது.

**சான்றாதாரங்கள்:**

[1] அரங்கஆட்டம், அஸ்வகோஸ்,சென்னை,1998

[2] தமிழ் நாடக ஆற்றுகைக் கூறுகளின் வரலாறு, பழனி,கோ,சென்னை,2019

[3] https://tamil.journo.lk

[4] வீட்டு முன்றில் அரங்கு பற்றிய இரா.சுலக்சனா எழுதியுள்ள விமரிசனக் கட்டுரை கையெழுத்துப்பிரதி.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR